விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருத்துறைப்பூண்டி-திருவாரூர் வழித்தட தூரம் 30 கி.மீ. ஆகும். வருவாயைவிட, தொடர் பேருந்து இழப்பில் செல்லும் நிலையில், முன்னுரிமை அடிப்படையில் கோரிக்கை வழித்தடத்தில் தொடர் பேருந்து இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

212—

பேருந்து வசதி

வினா எண் 1185—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை பேருந்து நிலையத்தில் பேருந்துகள் வந்து செல்ல அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

பேருந்துகள், பேருந்து நிலையம் வழியாக இயக்க தயாராக உள்ளன. பேருந்து நிலைய பயன்பாட்டுக்கு, உள்ளாட்சி அமைப்பு அடிப்படை வசதிகளை செய்து கொடுத்தால் பயணிகள் பேருந்து நிலையத்தை உபயோகப்படுத்துவார்கள்.

213—

பேருந்து வசதி

வினா எண் 1437—திரு. ஜே.சி.டி. பிரபாகர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வில்லிவாக்கம் தொகுதி, வில்லிவாக்கம் பேருந்து நிலையத்திலிருந்து தாம்பரத்திற்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போது வில்லிவாக்கத்திலிருந்து அடையாறு, வேளச்சேரி, பட்டினப்பாக்கம், வடபழனி, பிராட்வே, கோயம்பேடு மற்றும் வள்ளலார் நகர் ஆகிய இடங்களுக்கு 9 வழித்தடங்களில் 57 பேருந்துகளும், வில்லிவாக்கம் வழியாக 73 பேருந்துகளும் இயக்கப்படுகின்றன. எனினும், சட்டமன்ற உறுப்பினரின் கோரிக்கையினை ஏற்று தாம்பரத்திலிருந்து சென்னை புறநகர் பேருந்து நிலையம் வரை இயக்கப்படுகின்ற வழித்தடம் எண் 70வி-இல் உள்ள பேருந்துகளில் இரண்டினை வில்லிவாக்கம் வரை நீட்டிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

214—

பேருந்து வசதி

வினா எண் 1438—திரு. ஜே.சி.டி. பிரபாகர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வில்லிவாக்கத்திலிருந்து செங்கல்பட்டிற்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு உத்தரவின்படி, மாநகரப் பேருந்துகள் 50 கி.மீ. வரை இயக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. வில்லிவாக்கம்-செங்கல்பட்டு இடையேயான தூரம் 58.9 கி.மீ. அதிகமாக இருப்பதனால், வில்லிவாக்கம்-செங்கல்பட்டு இடையே மாநகரப் பேருந்துகளை இயக்க வாய்ப்பு இல்லை.

215—

பேருந்து வசதி

வினா எண் 1439—திரு. ஜே.சி.டி. பிரபாகர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வில்லிவாக்கத்திலிருந்து பூந்தமல்லிக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வில்லிவாக்கத்திலிருந்து அடையாறு, வேளச்சேரி, பட்டினப்பாக்கம், வடபழனி, பிராட்வே, கோயம்பேடு மற்றும் வள்ளலார் நகர் ஆகிய இடங்களுக்கு 9 வழித்தடங்களுடன் 57 பேருந்துகள் இயக்கப்படுகின்றன. மேலும், வில்லிவாக்கம் வழியாக 20 வழித்தடங்களுடன் மொத்தம் 75 பேருந்துகள் இயக்கப்படுகின்றன. மேலும், அம்பத்தூர் தொழிற்பேட்டையிலிருந்து பூந்தமல்லிக்கு மொத்தம் 6 பேருந்துகள் இயக்கப்படுகின்றன. எனினும், சட்டமன்ற உறுப்பினர் கோரிக்கைக்கிணங்க, பூந்தமல்லியிலிருந்து அம்பத்தூர் தொழிற்பேட்டை வரை இயக்கப்படுகின்ற பேருந்துகளில் இரண்டினை வில்லிவாக்கம் வரை நீட்டிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

216—

பேருந்து வசதி

வினா எண் 1440—திரு. ஜே.சி.டி. பிரபாகர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வில்லிவாக்கம் தொகுதி, ராஜமங்கலம் பகுதியிலிருந்து பாரிமுனைக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?